**ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் எண்ணக்கரு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம எண்ணக்கரு கட்டமைப்பின் படி ஒரு நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு கொண்டது மற்றும் அதன் செயல்பாடுகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்ற அனுமானத்தின் அடிப்படையிலே நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் ஹம்பாந்தோட்டையில் ஹோட்டலை நிர்மாணிக்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு கம்பனியின் இயக்குனர் சபை தீர்மானித்திருக்கிறது. இதன் விளைவாக அந்த ஹோட்டல் கட்டுமானப் பணிகள் முடிவுக்கு வந்தன. மேலும் பொது நிர்வாக மேம்பாட்டு அமைச்சகம் 01 ஆகஸ்ட் 2017 தேதியிடப்பட்ட அமைச்சரவை முடிவு இல 17/1613/733/029 பிரகாரம் கம்பனியினுடைய பங்குகளை கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டில் (தாய் கம்பனி) அவர்களின் பங்குகள் | நிறுவனத்தின் உரிமையை மறுசீரமைக்க 2017 ஆம் ஆண்டில் அமைச்சர்களின் அமைச்சரவை முடிவு அறிக்கையிடல் திகதியில் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை.<br><br>எவ்வாறாயினும் நிறுவனத்தின் தற்போதைய நிர்வாகமானது திட்டம் மற்றும் கம்பனியை முன்னெடுத்துச் செல்லும் வழியில் தெடர்புடைய அமைச்சகத்திடமிருந்து தேவையான | முகாமைத்துவமானது உரிய அதிகாரியிடம் தேவையான அறிவுறுத்தல்களைப் பெறுவதுடன் இப் பிரச்சனையை தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

உள்ள விகிதத்தில் அதன் பங்குதாரர்களுக்கு மாற்றுவதற்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது. எனவே மேற்கூறிய அமைச்சரவை முடிவின் விளைவாக தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அனுமானத்தின் அடிப்படையில் கம்பனி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முடியாது அத்துடன் சொத்து மற்றும் பொறுப்புக்கள் நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாதவையாக முன்னிலைப்படுத்தவும் முடியாதிருந்தது. எவ்வாறாயினும் கம்பனியானது ரூபா. 164,736,110 ஐ 31 திசம்பர் 2021 இன் நிதி

நிலமைக்கூற்றில் நடைமுறை அல்லா சொத்தாக வெளிப்படுத்தியிருந்தது.

உத்தரவுகளை நாடுகின்றது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் முக்கிய செயற்பாடு விருந்தோம்பல் வர்த்தகத்தில் ஈடுபடுவது மற்றும் ஹம்பாந்தோட்டை ஹயாட் ரீஜென்சி ஹோட்டலை சொந்தமாக வைத்திருப்பதாகும். கம்பனியின் இயக்குனர் சபை ஹம்பாந்தோட்டையில் நிர்மானிக்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு 2015 ஆம் ஆண்டு தீர்மானித்திருந்தது. இதன் விளைவாக அந்த ஹோட்டல் கட்டுமானப் பணிகள் முடிவுக்கு வந்தன. இருப்பினும் கம்பனி முன்னொக்கிச் செல்லும் வகையில் தேவையான உத்தரவுகளை தெடர்புடைய அமைச்சிடம் நாடுகின்றது.

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.11,875,894 இலாபமாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. Rs.13,456,358 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா.1,580,464 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிலையான வைப்புக்கள் மீளப் பெறப்பட்டதால் மீளாய்வாண்டிற்குரிய நிதி வருமானத்தில் ரூபா. 1,572,592 ஆல் ஏற்பட்ட குறைவு வீழ்ச்சிக்கான காரணமாகும்.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான வருமானம் , நிர்வாக செலவினங்கள் மற்றும் தேறிய இலாபம் / (நட்டம்) ஆகியவற்றின் மாறுபாடுகள் மற்றும் வீதாசாரத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு என்பவற்றினுடைய பகுப்பாய்வு பின்வருமாறு.

| **ஆண்டு** | **2021** | **2020** | **2019** | **2018** | **2017** |
|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் ரூபா. | 20,044,189 | 21,624,281 | 39,142,280 | 49,770,092 | 89,054,257 |
| வருமான வளர்ச்சியின் வீதாசாரம்/ (குறைப்பு) | -7% | -45% | -21% | -44% | -67% |
| நிர்வாக செலவினங்கள் | 4,418,012 | 3,918,547 | 4,003,549 | 6,415,872 | 7,354,115 |
| நிர்வாக செலவினங்களின் வளர்ச்சியின் வீதாசாரம்/ (குறைப்பு) | 13% | -2% | -38% | -13% | -61% |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்) | 11,875,894 | 13,456,358 | 25,299,887 | 31,848,469 | 63,498,793 |
| தேறிய இலாபத்தின் அதிகரிப்பு / (குறைவு) வீதாசாரம் | -12% | -47% | -21% | -50% | -72% |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்வுக்கு கிடைத்த நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் படி கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான சில முக்கிய விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **விகிதங்கள்** | **2021** | **2020** | **2019** | **2018** | **2017** |
|---|---|---|---|---|---|
| தேறிய சொத்தில் அதிகரிப்பு/(குறைவு) | 1.75% | 2.02% | 3.95% | 4.03% | -85.52% |
| நிதி வருமானத்தில் அதிகரிப்பு/(குறைவு) | -7.27% | -44.77% | 0.01% | -55.59% | -30.95% |
| மூலதனத்தின் மீதான வருவாய் | 2.26% | 1.98% | 3.79% | 4.97% | 13.26% |
| ஒரு பங்கு ஈட்டிய இலாபம் | 0.24 | 0.27 | 0.51 | 0.64 | 0.41 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாது முயற்சிகள் திணைக்களத்தின் உத்தரவின் படி, கம்பனி சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு 8.79% வட்டி வீதத்தில் சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டுடன் எந்த எழுத்து ஒப்பந்தமும் இல்லாமல் ரூபா.400 மில்லியன் (ரூபா.300 மில்லியன் 12 ஜனவரி 2018 இல் மாற்றப்பட்டது , ரூபா.100 மில்லியன் 18 ஜனவரி 2018 இல் மாற்றப்பட்டது ) குறுங்கால கடனை வழங்கியிருந்தது.<br>கம்பனி பெற வேண்டிய வட்டி ரூபா.107.07 மில்லியனை நிதியறிக்கையில் காட்டியிருந்தாலும் கூட இந்த தொகையானது சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டினால் கணக்காய்வு திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கிராண்ட் ஹயாட் கொழும்பு செயற்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள நிதிக் கட்டுப்பாடுகளைப் பார்க்கவும், தீர்வு எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>ஹயாட் திட்ட நிதியளிப்பு திட்டத்தின் படி, முகாமைத்துவம் உடனடியாக தீர்வை எதிர்பார்க்கிறது. | நிறுவனங்களுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்களுக்கு முகாமைத்துவம் சரியான கொள்கைகளை கொண்டிருக்க வேண்டும். |

### 3.2 செயலற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம் , பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி, 3.8 ஹெக்டெயர் நிலத்தை ரூபா.177.97 மில்லியன் முதலீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றது. எவ்வாறாயினும் அந்த நிலம் எந்த பயனுள்ள நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படவில்லை. | தற்போதைய நிர்வாகமானது திட்டம் மற்றும் கம்பனியை முன்னெடுத்துச் செல்லும் வழியில் தெடர்புடைய அமைச்சகத்திடமிருந்து தேவையான உத்தரவுகளை பெறுகின்றது.<br><br>நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிலத்தில் ஹெலன்கோ விடயத்தில் 2 சட்டக் கருத்துக்களை நாங்கள் சமர்ப்பித்திருக்கின்றோம். மற்றும் அது போன்றே 1 செப்டம்பர் 2022 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது அதற்கான பதிலுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். | முகாமைத்துவம் இந்தச் சொத்தை உத்தேசித்த நோக்கத்திற்காகவோ அல்லது வேறு ஏதேனும் பயனுள்ள நோக்கத்திற்காகவோ பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தால் வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றோம் மற்றும் வருடாந்த திட்டம் அல்லது செயல்திறனுக்கான இலக்கு ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான வழி இல்லை. கம்பனியின் எதிர்கால உத்தரவுக்கான வழிகாட்டுதல்களுக்காக நாங்கள் இன்னும் காத்திருப்பதால் உத்தரவு என்னவாக இருக்கும் என்று எங்களுக்கு நிச்சயிக்க முடியவில்லை.<br><br>ஒரு திட்டத்தை உருவாக்க முன்னோக்கிய வழியில் வழிகாட்டுதல்கள் தேவை. இதனை தொடர்புடைய அமைச்சிடமிருந்து நாடி இருக்கின்றோம், நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிலத்தில் ஹெலன்கோ விடயத்தில் 2 சட்டக் கருத்துக்களை நாங்கள் சமர்ப்பித்திருக்கின்றோம். மற்றும் அது போன்றே 1 செப்டம்பர் 2022 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது அதற்கான பதிலுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். | கம்பனி அதன் வருடாந்த செயல்திறன் இலக்குகளை அடைய ஒரு செயல் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 3.7.5 இற்கு அமைய செயற்பாடுகள் உண்மையாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக அமைப்பு முறைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வது உள்ளக கணக்காய்வு முகாமையாளரின் பொறுப்பாகும். ஆனால் நிறுவனத்தின் உள்ளக | 2015 இல் இருந்து கன்வில் குழுமத்தின் கீழ் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்திற்கு கால இடைவெளியில் உள்ளக கணக்காய்வு செயற்பாடு வெளிக்களம் செய்யப்பட்டது. வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின் அடிப்படையில், அவர்கள் 30 யூன் 2018 வரையான காலாண்டு அறிக்கைகளை கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கு அவர்களை பரிந்துரைக்கப்பட்டும் கூட கட்டுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதாலும் தொடர்ச்சியான கோவிட்19 கட்டுப்பாடுகளாலும் உள்ளக கணக்காய்விற்கு அழைக்கப்படவில்லை.<br><br>உள்ளக கணக்காய்வு முகாமையாளரானவர் | பெருநிறுவன நோக்கங்களை அடைவதற்கான வினைத்திறனுள்ள முகாமைத்துவ கருவியாக கம்பனிக்கான உள்ளக கணக்காய்வின் வினைத்திறனான தொழிற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| கணக்காய்வாளரின் பங்கு கொடுப்பனவுகளின் மீது முன் கணக்காய்வினை நடாத்துவதும் கொடுப்பனவு கைச்சாத்துக்களை உறுதிப்படுத்துவதற்கும் வரையறுக்கப்பட்டிருந்தது. | ஏற்கனவே உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட ஏதாவது குறைபாடுகள் என்பவற்றை மதிப்பாய்வு செய்கிறார். மேலும் அவர் முன்பு முன்னிலைப்படுத்தப்பட்ட பகுதிகளின் நிலையை மதிப்பாய்வு செய்து குழுவிற்கு அறிக்கை செய்கிறார். |